# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 33 ஹிஜ்ரி 1439 ஷவ்வால் ஜூன் 2018

இலவசம்

## மத்ரஸா அல்-அராபியா அல்-இஸ்லாமியா



## அனைவருக்கும் ஈதுல் பித்ர் நல்வாழ்த்துக்கள்

# புனித ரமலான் நல்வாழ்த்துகள்

முயிஸ் மன்றத்தின் தலைமை நிர்வாகி, முஃப்தி மற்றும் முயிஸ் பணியாளர்கள் இனிய ரமலான் நோன்பு மாத வாழ்த்துகளைத் தெரிவித் துள்ளனர்.

அளவில்லா நல்லாசிகளுடன் புனித ரமலான் மாதத்தில் நாம் அடியெடுத்து வைக்க மற்றுமொரு வாய்ப்பளித்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்!

இவ்வாண்டு ஐம்பதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முயிஸின் மையக் கருப்பொருளுக்கு ஏற்ப தன்னம்பிக்கையுடன் முயற்சியெடுத்து பரிவுடன் சேவையாற்றுவோம். ரஹ்மா என்னுடன் தொடங்குகிறது என்ற கருப்பொருளைக் கொண்டுள்ளது ரமலான் பிரச்சாரத் தலைப்பு. இந்த சிறப்புமிக்க ரமலான் மாதத்தில் ஒவ்வொரு முஸ்லிமும் ரஹ்மா அல்லது அனைவருக்கும் நல்லாசி வழங்கும் உணர்வை வெளிப்படுத்த வேண்டுமென இதன் கருப்பொருள் அழைப்பு விடுக்கிறது.

இந்த ரமலான் மாதத்தில் இறைவனின் சாந்தியும் சமாதானமும உண்டாகட்டும். நபிகள் நாயகத்தின் பாதச்சுவடுகளைப் பின்பற்றி அறிவாற்றலை நாடிச் செல்லுதல், நேர்மறை பண்புகளை ஊக்குவித்தல், வலுவான மீள்திறன் மிக்க குடும்பங்களை நிர்மானித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்ட நாமும் முன்னுதாரணமாகத் திகழ்வோமாக!

பள்ளிவாசல்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தும், அவற்றுக்குப் பங்களித்தும் நமது தொழுகையையும் அறப்பணிச் செயல்களையும் பெருக்குவதற்கும் ரமலான் ஏராளமான தருணங்களை நமக்கு வழங்குகிறது. அது மட்டுமின்றி குடும்பத்தோடு தரமான நேரம் செலவிட்டு வலுவான பந்தங்களை வளர்த்துக் கொள்ளவும் நாம் நேரம் ஒதுக்க வேண்டும். இனம் அல்லது சமயப் பாகுபாடின்றி அனைவருக்கும் ரஹ்மா வழங்கி இப்புனித மாதத்தைக் கொண்டாடுவோம். தேவையுள்ளவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும் நாம் ஊக்குவிக்கப்படுகிறோம்.

நம் சுற்றுப்புறத்தைக் கட்டிக்காக்கவும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை அடைவதற்கு முயற்சி எடுக்கவும் ரமலான் மாதம் முஸ்லிம்களுக்கு ஒரு தளத்தை அமைத்துத் தருகிறது. நாம் மனவுறுதியுடன் செயல்பட்டால் ஆன்மீகத்திலும் ஆரோக்கியத் திலும் நம்மை மேம்படுத்திக்கொள்ளும் இலக்கை நம்மால் அடைய முடியும்.

இந்த ரமலான் மாதம் ஈமான் மற்றும் தக்வாவைப் பெருக்கி நம்மை சிறந்த முஸ்லிம்களாக ஆக்கட்டும். நமது மேன்மை யான எண்ணங்கள் அனைத்தையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக.

ஆமீன், யாரப்பில் ஆலமீன்.

# தண்ணீர் சேமிப்பு சமூகக் கடமை

தண்ணீர் சேமிப்பில் பள்ளிவாசல்களின் பங்கை எடுத்துரைக்கும் நிகழ்ச்சி கடந்த மார்ச் மாதம் செங்காங் அல் மவத்தா பள்ளிவாசல் மதரஸாவில் நடைபெற்றது.

ஐந்து நேரத் தொழுகைக்காக அன்றாடம் ஒது-அங்கசுத்தி செய்து கொள்வதற்கு தண்ணீரைப் பயன்படுத்துகிறோம், அதற்கு எடுத்துக்காட்டாக மதரஸா மாணவர்கள் முக்கால் லிட்டர் தண்ணீர் கொண்ட போத்தலைப் பயன்படுத்தி அங்கசுத்தி செய்து காட்டினர்.

*9-3-18* வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையில் கலந்துகொண்ட சுற்றுப்புற நீர்வள அமைச்சர் மசகோஸ் ஜுல்கிஃப்லி, அந்த தண்ணீர் சேமிப்பு முறையைப் பார்வையி ட்டார். இந்தப் பள்ளிவாசலின் மழைநீரைச் சேகரிக்கும் முறை, குளிர்சாதனப் பெட்டியி லிருந்து வெளியாகும் நீரை செடிகளுக்கு ஊற்றும் முறை, தரையைக் கழுவும் முறை ஆகியவற்றையும் பார்த்து வெகுவாகப் பாராட்டினார் அவர்.

“நானும் அதிபர் ஹலிமா யாக்கூபும் உலக தண்ணீர் தினத்தை மார்ச் 3ம் தேதி தொடங்கிவைத்தோம். தண்ணீர் நம் வாழ்வில் எந்த அளவுக்கு இன்றியமையாதது என்பதை உலகுக்கு உணர்த்தும் முக்கிய தருணம் இது. பொதுவாக, தண்ணீரின் முக்கியத்துவத்தை நாம் மெத்தனமாக எடுத்துக் கொள்கிறோம். தண்ணீர் பயன்பாட்டைக் குறைக்க முஸ்லிம் சமூகம் எடுத்துள்ள இந்த முயற்சி குறித்து மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக, இந்தப் பள்ளிவாசல் தனது மாணவர்களையும், தொழுகைக்கு வருவோரையும் ஒன்றுதிரட்டி தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர்த்துவது டன், தண்ணீர் சேமிப்பு பற்றியும் எடுத்துரைத்து வருகிறது” என்று செய்தியாளர் களிடம் கூறினார் அமைச்சர் மசகோஸ் ஜுல்கிஃப்லி.











# மதரஸா அல்-அராபியா அல்-இஸ்லாமியா திட்டம்

சிங்கப்பூரில் மதரஸா அல்-அராபியா அல்இஸ்லாமியா கல்வி நிலையம் அமைக்கப் படுகிறது.

கல்வி, தகவல் தொழில்நுட்ப வகுப்பறைகள், அறிவியல் மையங்கள் முதலான வசதிகளைக் கொண்ட புதிய ஐந்து மாடி பள்ளி நிலையமாக மதரஸா அல்-அராபியா அல்-இஸ்லாமியா கட்டப்படும். அதில் இரண்டு அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இருக்கும்.

பசுமையான இயற்கைத் தோற்றத்துடன் அமைக்கப்படும் அல்-அராபியா ‘நுஸாந்தரா’ நவீன கோட்பாட்டு மையமாகவும் திகழும், அல்-இஸ்லாமியா கல்வி நிலைய மாணவர்களு க்கு உயர்நிலைப் பள்ளித்தரமுடைய அறிவியல் பாடமும், வலுவான இஸ்லாமிய நெறிமுறை களும் கற்பிக்கப்படும். நவீன வசதிகளைக் கொண்ட மதரஸா அல்-அராபியா அல்-



இஸ்லாமியா கல்வி நிலைய வளாகம், சுமார் *17* மில்லியன் வெள்ளி செலவில் கட்டப்படவுள்ளது. *2020* ஜனவரியில் இயங்கத் தொடங்கும்.

# முயிஸ் செயல் திட்டங்கள்



முயிஸ் ஐம்பதாம் ஆண்டு விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு பல சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தவிருக்கிறது.

அதன் ஒரு பகுதியாக மூன்று ஆண்டு திட்டத்தின் கீழ்,

1. வசதி குறைந்த, நடுத்தர முஸ்லிம் குடும்பங்களுக்கு ஒரு மில்லியன் வெள்ளி உதவி வழங்கப்படும்

2. சமூக நற்பணி நிபுணர்களுக்கு ஆய்வு விருது வழங்கும் திட்டத்தையும் முயிஸ் மேற்கொள்ளவிருக்கிறது

3. நான்கு வட்டாரப் பள்ளிவாசல் மேம்பாட்டுத் திட்டத்தையும் அது நிறைவேற்றவிருக்கிறது.

# நோன்பு திறப்புக்கு அரிசி நன்கொடை



நோன்புப் பெருநாளை முன்னிட்டு ரமலான் மாதம் முழுதும் நோன்பு திறக்கும் முஸ்லிம் அன்பர்களுக்கும், வசதி குறைந்தோருக்கும் உதவும் வண்ணம் இந்து அறக்கட்டளை வாரியம் அரிசி நன்கொடை வழங்கியிருக்கிறது.

இந்து அறக்கட்டளை வாரியம் இவ்வாண்டு முதல்முறையாக, 2 டன் எடை அரிசியை 14-5-2018 அன்று பஆல்வி பள்ளிவாசலுக்கு அளித்தது.

அதே நிகழ்ச்சியில், சிங்கப்பூர் புத்தர் லாட்ஜ் (Singapore Buddhist Lodge) 30 டன் எடை அரிசியும், அமித்தபா புத்தர் அமைப்பு (Amitabha Buddhist Association) 20 டன் அரிசியையும் பஆல்வி பள்ளிவாசலில் நன்கொடையாக வழங்கின. மொத்த நன்கொடையாக 52 டன் அரிசியை பஆல்வி பள்ளிவாசல் பெற்றுக் கொண்டு, அவற்றை நோன்பு கஞ்சிக்கும் மற்றும் வசதிகுறைந்த குடும்பங்களுக்கு விநியோகம் செய்தது.

சமயங்களுக்கு இடையிலான ஒற்றுமையை மேம்படுத்துவதே இதன் இலக்கு என்று இந்து அறக்கட்டளை வாரியத்தின் தலைவர் ஆர்.ஜெயசந்திரன் தெரிவித்தார். பஆல்வி பள்ளிவாசலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல சமூகத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



# முயிஸ் 50 கலந்துரையாடல்

முயிஸ் கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து சமூக சமயத் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. சமுதாய முன்னேற்றமே அதன் நோக்கம். மூன்று அம்சங்கள் அதில் இடம் பெற்றன, அவை:

1 சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் சமயச் சார்புடைய வாழ்க்கை
2 இஸ்லாமியக் கல்வி- அக்கறை, வரம்பு, தேவை மற்றும் விருப்பங்கள் சார்ந்த கல்வி முறை
3 பள்ளிவாசல்கள்- சமுதாயத்துக்கும், விரிவான எதிர்கால சமூகத்திற்கும் செயலாற்றும் நடைமுறை

இருபது கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் 613 பேர் கலந்து கொண்டனர். முயிஸ் 50




கலந்துரையாடல் நிறைவுக் கூட்டம் மஸ்ஜித் அல்-அன்ஸாரில் நடைபெற்றது. 50 ஆண்டு சமுதாயப் பணிகள் விவாதத்தில் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

ஒரு மாதத்துக்குத் தேவையான வகையில் உரிய நன்கொடையாக இந்த அரிசியை நாங்கள் வழங்கியுள்ளோம், இதுபோன்ற பல இன பல சமய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள் நமது சமுதாயத்திற்கு முக்கியம், அதற்கு உதாரணம் இந்த அரிசி நன்கொடை என்றார் திரு. ஆர்.ஜெயசந்திரன்.

ரமலான் மாதம் சிங்கப்பூருக்குச் சிறப்பு வாய்ந்தது. சிங்கப்பூரில் நோன்புப் பெருநாள் முஸ்லிம்களுக்கு மட்டுமில்லாமல், மற்ற இனத்தவர்களும் ஒன்று சேர்ந்து கொண்டாடும் பெருநாளாக அமைந்துள்ளது, என்று முயிஸ் தலைவர், ஹாஜி முகம்மது அலமி மூஸா குறிப்பிட்டார்.





ரமலான் மாதத்தையொட்டி நான்கு பள்ளிவாசல்களிலுள்ள முஸ்லிம்களுக்கு நோன்புக் கஞ்சியாகவும் வசதி குறைந்தவர்களுக்கு உணவாகவும் இந்த அரிசி சென்றடையும். ஆல்வி, அன்-னஹ்டா, அப்துல் கபூர், ஜாமியா சூலியா பள்ளிவாசல்கள் இந்த நன்கொடையைப் பெற்றுக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்புகளை வலுப்படுத்தும் சிறந்த எடுத்துக்காட்டு இந்த நன்கொடை. வசதி குறைந்த பல குடும்பங்கள் இந்நான்கு பள்ளிவாசல்களையும் சார்ந்திருப்பதால், அரிசி நன்கொடை அவர்களைச் சென்றடையும் என்று இந்து அறக்கட்டளை வாரியத் தலைமை நிர்வாகி திரு. த.ராஜசேகர் குறிப்பிட்டார்.

# அதிபருடன் இஃப்தார்





அதிபர் ஹலிமா யாக்கூப் பல நோன்பு திறக்கும், இஃப்தார், நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

அதிபரும், அவருடைய கணவர் முஹம்மது அப்துல்லா அல்ஹப்ஷியும் மஸ்ஜித் அன்-னஹ்டாவில், 23-5-18ல் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். அக்கம்பக்க குடியிருப்பாளர்களும், மற்றும் பிற நல்லிணக்க அமைப்புகளின் பிரதிநிதிகளுமாக சுமார் 200 பேர் இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர்.



# புனித ஹஜ் பயணம்

இந்த ஆண்டில் 900 சிங்கப்பூர் முஸ்லிம்கள் புனித ஹஜ் பயணம் செய்யலாம் என முயிஸ் அறிவித்திருக்கிறது. சவூதி அரேபியா அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. இது முந்திய ஆண்டு எண்ணிக்கையைக் காட்டிலும் 100 அதிகம். முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகித்த அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் மார்ச் 23 அன்று ஹஜ் பயணத் திட்டத்தை வெளியிட்டார்.

கடந்த 2012-2016ம் ஆண்டுகளுக்கு இடையில், ஆண்டு தோறும் 680 சிங்கப்பூரர்கள் ஹஜ் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அந்த எண்ணிக்கை தற்போது உயர்த்தப் பட்டிருப்பதால், ஹஜ் கடமையை நிறைவேற்ற விரும்பும் முஸ்லிம்கள் பதிவுசெய்து கொள்ளலாம் என முயிஸ் தெரிவித்துள்ளது. சிங்கப்பூரில் ஹஜ் பெருநாள் ஆகஸ்டு 22ஆம் நாள் கொண்டாடப்படும்.

# நோன்பின் மாண்பு

விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்ட பிரகாரமே உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கின்றது. அதனால் நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்.

திருக்குர்ஆன் வசனம் 2-183

ரமலான் மாதம் எத்தகையை மகத்துவம் உடையதென்றால், அதில் தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும், நன்மை தீமைகளைத் தெளிவாக்கக் கூடியதாகவும், அவற்றைப் பிரித்தறிவிக்கக் கூடியதாகவும் உள்ள இவ்வேதம் திருக்குர்ஆன் அருளப்பெற்றது.

திருக்குர்ஆன் வசனம் 2-185



# இந்தியப் பிரதமர் பார்வையிட்ட ஜாமியா சூலியா பள்ளிவாசல்



சிங்கப்பூருக்கு மூன்று நாள் வருகையளித்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பழைமைவாய்ந்த பல வழிபாட்டுத் தலங்களைப் பார்வையிட்டார். கலாசார, சமூக, இளையர் துறை அமைச்சர் கிரேஸ் ஃபூவும் அவருடன் வந்தார். சவுத் பிரிட்ஜ் சாலை ஜாமியா சூலியா பள்ளிவாசலை 2-6-18 பிற்பகலில் பார்த்து மகிழ்ச்சி தெரிவித்தார். நரேந்திர மோடி அதன் வரலாற்றையும் கட்டடக் கலை திறன்களையும் கேட்டறிந்தார்.

முயிஸ் அதிகாரிகள், இந்திய முஸ்லிம் அமைப்புகளின் தலைவர்கள், குவைத்துக்கான சிங்கப்பூர தூதர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத், சிங்கப்பூருக்கான இந்தியத் தூதர் ஜாவித் அஷ்ரப், ஜாமியா துணைத் தலைவர் முனைவர் சலீம் ஆகியோர் பிரதமர் நரேந்திர மோடியுடன் பள்ளிவாசல் வளாகத்தில் இருந்தனர்.

ஜாமியா சூலியா பள்ளிவாசல் நிர்வாகக் குழுவின் தலைவர் ஷேக் ஃபக்ருதீன் இந்தியப் பிரதமருக்கு நினைவுப் பொருளை வழங்கினார்.

# அரப் ஸ்திரீட் அஞ்சல் தலைகள்



வரலாற்றுச் சிறப்புடைய சிங்கப்பூர் நினைவிடங்களும் வட்டாரங்களும் அஞ்சல் தலைகளில் இடம் பெற்றுள்ளதை அறிவோம். அரப் ஸ்திரீட், கம்போங் கிளாம் ஆகிய வட்டாரங்களை நினைவுகூரும் அஞ்சல் தலைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. சிங் போஸ்ட் 21-3-18 அன்று அவற்றை வெளியிட்டது.

இந்தப் புதிய தபால் தலைகள் அரப் ஸ்திரீட்டின் பழைய, புதிய கடை வீடுகளையும், கம்போங் கிளாமில் அமைந்துள்ள சுல்தான் பள்ளிவாசலையும் சித்தரிக்கின்றன. இவற்றை அஞ்சலகங்களில் வாங்கலாம். சிங் போஸ்ட் இணையத்தளம் வாயிலாகவும் வாங்கிக் கொள்ளலாம்.

# டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் பதவி ஓய்வு




நீண்ட காலம் அமைச்சராகவும், பல அமைப்புகளின் தலைவராகவும் பதவிவகித்த டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், மே 30ம் தேதி அமைச்சரவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

நம் இந்திய முஸ்லிம் சமூகத்திற்கு அவர் ஆற்றிய நற்பணிக்கு நன்றி கூறும் நிகழ்ச்சிக்கு இந்திய முஸ்லிம் பேரவை ஏற்பாடு செய்திருந்தது. 13-5-18ல் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், இந்திய முஸ்லிம் பேரவை, அதன் புதிய செயல் திட்டத்துடன், புதிய இணையத்தளைத்தையும் அறிமுகம் செய்தது.

பென்கூலன் பள்ளிவாசலின் பல பயன் மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு, வர்த்தகத்தலைவர்கள், சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள் என சுமார் 100 பேர் கலந்துகொண்டனர்.



# சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் குடும்ப தின விழா

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் அதன் குடும்ப தின விழாவை சிறப்பாக நடத்தியது. 16-3-18 அன்று லாப்ரடார் பார்க் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் பல சமூக, சமய, அரசியல் தலைவர்களும் மக்களும் கலந்து கொண்டனர்.

"அறிவார்ந்த நாட்டிற்கு அறிவார்ந்த சமுதாயம்" எனும் முழக்க வரிகளுடன் விழா கொண்டாடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ஜைனல் சஃபாரி பாராட்டுரை வழங்கினார். இந்திய முஸ்லிம் பேரவை, தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், மெண்டாக்கி, சிண்டா, ஸ்ரீ நாராயண மிஷன், தேசிய நூலக வாரியம் முதலான அமைப்புகளின் பேராளர்களும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மகிழ்ச்சி தெரிவித்தனர்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவர் நஸீர்கனி, துணைத் தலைவர் மு.அ.மசூது ஆகியோரும் நீண்ட காலமாக சங்கம் நடத்திவரும் குடும்ப தினம் முதலான விழாக்களையும் சாதனைகளையும் விவரித்துப் பேசினர்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் அதன் 75ம் ஆண்டு நிறைவாக பவளவிழாவைக் கொண்டாடியதை அறிவோம். 1941 ஜுன் 3ம் தேதி தொடங்கப்பட்ட சங்கம், அதன் பவள விழாவில் அரசாங்கத் தலைவர்கள், பல்வேறு சமூகப் பிரதிநிதிகள், பல இன, சமுதாயப் பேராளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# பட்டதாரி இளையர்களின் ஆலோசனை கூட்டம்

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் பட்டதாரி இளையர்களுக்காக ஓர் ஆலோசனை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது.

பொதுச் சேவையில் பட்டதாரி இளையர்களின் ஈடுபாடு தற்போது எப்படி இருக்கிறது, அவர்களின் ஈடுபாட்டை இன்னும் அதிகரிக்க என்ன செய்யலாம் என்பது குறித்த ஒரு ஆலோசனையை அவர்களிடமே கேட்டு செயல் படுத்தலாம் என்ற எண்ணத்தில், கடந்த ஏப்ரல் 14ம் தேதி சனிக்கிழமை மாலை 5மணி முதல் இரவு 8:30 மணிவரை சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ஹாஜி அசன் மசூத் அவர்களின் தலைமையில், பென்கூலன் பள்ளி வாசலின் பலநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் 40 பட்டதாரி இளையர்கள் உட்பட 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தலைவர், பேராசிரியர் ஜனாப் முஹைதீன் அப்துல் காதர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அதில் பல நல்ல கருத்துகளை அவர் வழங்கினார். கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கத்தின் செயலாளர் ஜனாப் மஞ்சா இஸ்ஹாக் நன்றி தெரிவித்தார்.





# இந்திய முஸ்லிம் பேரவை

## இன்பத்தமிழும் - இளைய தலைமுறையும்

சிங்கப்பூர் தமிழ்மொழி விழா கொண்டாட்டத்தில் ஓர்அங்கமாக சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் பேரவை 15-4-18 ஞாயிறு மாலை, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் “இன்பத்தமிழும்-இளைய தலைமுறையும்” நிகழ்ச்சியை நடத்தியது.




பன்னிரெண்டு ஆண்டுகளாக சீரும் சிறப்புமாக நடைபெற்றுவரும் தமிழ்மொழி விழாவில் முதல் தடவையாக காலடி எடுத்துவைக்கும் இந்திய முஸ்லிம் பேரவை, தமிழ்மொழி விழாவிற்கு ஆளூர் ஷா நவாஸை சிறப்புப் பேச்சாளராக அழைத்திருந்தது.

சரியாக மாலை 6 மணிக்கு திருமதி ஸ்வப்னஸ்ரீ தமிழ்த்தாய்வாழ்த்துப் பாட, நிகழ்ச்சி துவங்கியது. நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜாலான் பெசார் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. டெனிஸ் புவா லே பெங்க் கலந்துகொண்டு சிறப்பித்தார்.



ஆளூர் ஷா நவாஸின் உரை மிக கருத்தாழத்தோடு ஆணித்தரமாக இருந்தது. “யாதும் ஊரே யாவரும் கேளிர்”, “பிறப்பொக்கும்எல்லா உயிர்க்கும்” போன்ற தமிழ் மரபின் கூறுகளை நோக்கி இளைய சமுதாயத்தைக் கொண்டு வரவேண்டும். மொழியின் மாண்பை, வரலாற்றை உணரச் செய்யவேண்டும் என்று உணர்ச்சிப்பூர்வமாக உரையாற்றினார்.



நிகழ்வில் மலாய் மொழியை தாய்மொழியாகக் கொண்ட திரு. காலித் சுபாண்டி “என்னைகவர்ந்த தமிழ்” என்ற தலைப்பில் தமிழில் பேசி, திருக்குறள் ஒப்புவித்து, தமிழ் பாடல் பாடி அசத்தினார்.

17 மாணவர்கள் ஒன்றிணைந்து வழங்கிய “தமிழின் தொன்மை உங்களுக்குத் தெரியுமா?” நிகழ்ச்சி சிந்தனையைத் தூண்டியது.

முன்னதாக, 19 இந்திய முஸ்லிம் அமைப்புகளின் கூட்டமைப்பு, இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் திரு. முஹம்மது கவுஸ் தலைமையுரை நிகழ்த்த, விழா ஒருங்கிணைப்புக்குழு தலைவரும், முஸ்லிம் லீக் (சிங்கப்பூர்) தலைவருமான புதியநிலா மு. ஜஹாங்கீர் வருகைதந்த அனைவரையும் வரவேற்று, நன்றி கூறினார்.



# நூல் வெளியீடு











### செந்தமிழ்த் திருநாடு சிங்கப்பூர்

எழுத்தாளர் ஜே. எம். சாலியின் எழுத்துலகப் பயணம் தமிழகத்தில் தொடங்கி சிங்கப்பூரில் தொடர்கிறது. 1955 ஏப்ரல் மாதம் எழுதத் தொடங்கிய சாலியின் இலக்கிய மணிவிழா ஆண்டு 2015. அதன் விளைவாக அறுபதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

செந்தமிழ்த் திருநாடு சிங்கப்பூர் அவருடைய புதிய நூல். சிங்கப்பூரின் ஆட்சி மொழியாகத் திகழும் தமிழின் சிறப்பை 80 தலைப்புகளில் படங்களுடன் இவர் வெளியிட்டிருக்கிறார்.

சிங்கப்பூர் அரசாங்கத்தின் கலாச்சார பதக்க விருதை 2012ல் பெற்ற ஜே.எம். சாலி, 1962 முதுகலை எம்.ஏ. பட்டத்துடன் தமிழ்முரசில் பணியுரிய 1964ல் சிங்கப்பூருக்கு வந்தார். 1983 முதல் சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகத்திலும், தொலைக் காட்சிக் கழகத்திலும் 24 ஆண்டுகள் பணியாற்றினார்.

சிங்கப்பூருக்கு அனைத்துலக அங்கீகாரத்தைத் தேடித் தந்த ஐந்து எழுத்தாளர்களில் ஒரே தமிழ் எழுத்தாளர் ஜே.எம். சாலி என்று 2005ல் சிங்கப்பூர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார் அன்றைய தகவல், கலை அமைச்சர் டாக்டர் லீ பூன் யாங்.

2015 டிசம்பர் மாதம் தாய்லாந்து தலைநகர் பேங்காக்கில் ஆசியான்-தென்கிழக்கு ஆசிய கலை-இலக்கிய உயர் விருதைப் பெற்றார் ஜே.எம், சாலி.

### கவிதைப் பெண்

கவிஞர் க.து.மு. இக்பாலின் ‘கவிதைப் பெண் நூல் வெளியீட்டு விழா 11-3-18 அன்று நடைபெற்றது, தேசிய நூலகத்தின் மேல் மாடியில், சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழக ஏற்பாட்டில் கவிதைப் பண்புகளின் களமாக விளங்கும் பாடல்களின் தொகுப்பு என்ற அட்டைப்பட வாசகத்துடன், தேசிய கலை மன்றத்தின் ஆதரவில் பதிப்பிக்கப்பட்டுள்ள நூல் இது.

பேராசிரியர் சுப. திண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற விழாவில் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் ஆண்டியப்பன் வரவேற்புரையுடன் பலர் நூலை சிறப்பித்துப் பேசினர்.

பல கவிதை நூல்களை வெளியிட்டுள்ள கவிஞர் க.து.மு. இக்பால், 2014ல் சிங்கப்பூர் அரசாங்கத்தின் கலாச்சார பதக்க விருதைப் பெற்றார்.

நூல் வெளியீடு விழாவில், கவிஞர் க.து.மு. இக்பால் ஏற்புரையும் நன்றியுரையும் ஆற்றினார்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் சங்கத்தின் தலைவர் நசீர் கனி நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

வளர்தமிழ் இயக்கம் முதலான அமைப்புகளின் பேராளர்களும் விழாவில் கலந்து கொண்ட பலரும் கவிதைப் பெண் தொகுப்பை வாங்கிச் சிறப்பித்தனர்.

# முயிஸ் கருத்தரங்கு




புகழ்மிக்க இஸ்லாமிய அறிஞர், அல்-அஸ்ஹார் பல்கலைக்கழகத்தின் தலைமை இமாம், டாக்டர் அஹமது அல் தாயிப், மார்ச் 3 அன்று சிங்கப்பூருக்கு வருகையளித்தார், பல சமய சமூக மக்களை ஒருங்கிணைக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள அவர், பிரதமர் லீ சியென் லூங்கின் அழைப்பை ஏற்று இங்கு வந்தார்.

மூன்று நாள் பயணத்தின்போது சிங்கப்பூர் தலைவர்களை டாக்டர் அஹமது அல் தாயிப் சந்தித்தார், சமூக சமய நிகழ்ச்சிகளில் உரையாற்றினார். இஸ்லாமியக் கல்வி, பல சமய நல்லிணக்கம் ஆகியவை குறித்து அவர் விவாதித்தார்.

டாக்டர் அஹமது அல் தாயிப், தனது மூன்று நாள் சிங்கப்பூர் பயணத்தின்போது, சமய மறுவாழ்வு சீறமைப்பு குழுவின் ஆலோசனை மையத்திற்கு சென்று பார்வையிட்டார்.

முயிஸ், 4-5-18 வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் சமய ஐக்கிய சக்தி என்ற தலைப்பில் உரையாற்றினார்.



